21st November 1963]

திரு. எம். எஸ். மணி: ஸார், சலவைத் தொழிலாளர்களிடமிருந்து கூட்டுறவு முறையில் பவர் லாண்டரி அமைப்பதற்குப் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டது எவ்வளவு? அந்தத் தொகை யாரிடம் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தத் தொகை எல்லாம் ஒழுங்காகத்தான் இருக்கிறது. வேறு விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

Nurses (students)

*401 *Q.*—Sri K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the pupil-nurses in receipt of stipends were being put to great inconvenience and hardship due to the extraordinary delay in disbursement in some of the nurses training centres in Madras City; and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (*a*) & (*b*). There have been no cases of extraordinary delay in disbursement of stipends to pupil-nurses. However, short delays have unavoidably occurred on occasions due to delays in transmission of the last pay certificates of trainees from one institutions to another or on account of time taken in sanctioning new stipends, etc.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், எந்த மாதத்தில் இந்தப் பயிற்சி நிலையங்களிலே நர்சுகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்? எந்த மாதத்தில் ஸ்டைபண்டு கொடுக்கப்பட்டது என்பதைக் கூற முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

மருத்துவ சேவகிப் பயிற்சி

*402 கேள்வி.—திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவ சேவகி (Maternity Assistan's) பயிற்சி பெறுபவர்களைத் தேர்ந்து எடுப்பது, மாவட்டங்களில் இல்லாமல், சென்னையில் வைத்து நடத்துவது ஏன்?

(இ) அந்தந்த மாவட்டங்களிலுள்ள மருத்துவ அதிகாரிகளே இந்த தேர்வு செய்வதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (*a*) & (*b*) The training course for Maternity Assistants has now been replaced by the training course for Auxilliary Nurse Mid-wives. Candidates for admission to the training course for Maternity Assistants were being selected by Committees of the respective training institutions only both in the city and in the districts. Selection of candidates to the training course for Auxiliary Nurse Mid-wives is also similarly done by a Committee at each training centre.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : மருத்துவ சேவகிப் பயிற்சிக்கு மிகவும் ஏழை எளிய பெண்கள் முன் வருகிறார்கள். அவர்களை தேர்ந்தெடுப்பது சென்னையில் இருப்பதால் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அவர்கள் சென்னைக்கு வருவதன் காரணமாக அதிக செலவுக்குள்ளாகிறார்கள். ஆகவே அந்தந்த மாவட்டத்திலேயே மருத்துவ அதிகாரிகளைக் கொண்டு இந்த செலெக்ஷனைச் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த மாதிரி ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் சென்னைக்கு வந்துதான் செலெக்ஷன் ஆக வேண்டும் என்ற நிலை இல்லை. ஜில்லா மருத்துவ அதிகாரியே செலெக்ஷன் செய்கிறார். கனம் அங்கத்தினருடைய இன்பர்மேஷன் சரி அல்ல.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : ஸார், நெல்லை மாவட்டத்தில் மருத்துவ அதிகாரிகள் நேரில் என்னிடம் கூறியதை வைத்துத் தான் சொல்கிறேன். ஆகவே அதற்கு அமைச்சர் அவர்கள் தக்க பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : அவர்மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேளுங்களேன். (சிரிப்பு)

(பதில் இல்லை)

Master Plan for Madras City

* 403 Q.—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any Master Plan has been prepared by the Town Planning Department for Madras City;

(*b*) if so, the details thereof;

(*c*) whether it is a fact that the year 1924 has been taken as the basis for the preparation of the new plan;

(*d*) if so, the reasons therefor; and

(*e*) whether the Government are aware that after 1924 lot of buildings have been built in Madras City?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) சென்னை நகரத்துக்கும் நகர்ப்பகுதிக்கும் "மாஸ்டர் பிளான்" ஒன்றை டவுன் பிளானிங் இலாகா தயாரித்து வருகிறது.

(இ) சென்னை மாநகர் நகரப்பகுதிக்கு மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிப்பதற்காக மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் திட்டம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. முதல் நிலையில், சென்னை மாநகர்ப் பகுதிக்குத் தோராயமான அபிவிருத்தித்திட்டம் ஒன்றைத் தயாரித்து, முடிவில் விரிவாக மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்கு ஆரம்ப நிலையில் தேவைப்படும் பணியாளர்களை அமர்த்திக் கொள்ளவும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.